**TA2A** Register No. [ ]

**4927–21**

(For the candidates admitted from 2017-2018 onwards)

**LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, FEBRUARY 2022.**

(Three- year Regular Course)

First Year – Second Semester

**LAW OF CONTRACTS - II**

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

**PART A** — (2 × 12 = 24 marks)

**Answer TWO of the following in about 500 words each.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the circumstances under which a surety in discharged from liability.
எந்தெந்த சூழ்நிலைகளில் பொறுப்புறுதி அளித்தவர் தனது பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படுவார் என்பதை விளக்குக.

2. State the exceptions to the maxim–"Nemo dat quod non habet", under the Sale of Goods Act.
சரக்குகள் விற்பனை சட்டத்தின் கீழ் "ஒருவர் தான் பெற்ற உரிமையை விட மிதமான உரிமையை மற்றவருக்கு மாற்றி அளிக்க இயலாது" என்ற கோட்பாட்டின் விதி விலக்குகளைக் கூறுக.

3. Briefly explain the Consumer Protection Councils, its organisation, objects and procedure.
நுகர்வோர் பாதுகாப்புக் குழுக்களைப் பற்றியும் மற்றும் அவற்றின் அமைப்பு, நோக்கம் மற்றும் நடைமுறைகளைப் பற்றியும் சுருக்கமாக விளக்குக.

**PART B** — (2 × 7 = 14 marks)

**Answer TWO of the following in about 300 words each.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. "Pledge is a form of Bailment". Explain.
"அடகு ஒரு வகையான ஒப்படைவே" - விளக்குக.

5. Explain the rights of a surety against
   (a) Creditor
   (b) Principal debtor
   (அ) கடனீந்தவர்
   (ஆ) கடன் பெற்றவர் இவர்களுக்கு எதிராக பொறுப்புறுதி அளித்தவரின் உரிமைகளை விளக்குக.

6. Define partnership. What are the essential elements of partnership?
கூட்டாண்மையை வரையறை செய்யவும். கூட்டாண்மையின் முக்கியமான அம்சங்கள் என்ன?

**PART C** — (5 × 4 = 20 marks)

7. **Write short notes on FIVE of the following :**
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

   (a) Consumer dispute
   நுகர்வோர் தகராறு

   (b) Auction sale
   ஏல விற்பனை

(c) Del credere Agent
பிணை முகவர்

(d) Damages
இழப்பீடு

(e) Goodwill of a firm
கூட்டாண்மையின் நற்பெயர்

(f) Sale and agreement to sell
விற்பனை மற்றும் விற்பனைக்கான உடன்படிக்கை

(g) Bailment, contract
ஒப்படைவு ஒப்பந்தம்

**PART D** — (2 × 6 = 12 marks)

**Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases with cogent reasons.**

**பின்வருவனவற்றுள் <u>இரண்டிற்கு</u> சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.**

8. 'A' sells and delivers goods to 'B'. 'C' afterwards without consideration agrees to pay for the goods if 'B' fails to pay. 'B' failed to pay. Decide the liability of 'C'.
'அ' என்பவர் 'ஆ' என்பவருக்கு சரக்குகளை விற்று 'ஆ'விடம் ஒப்படைத்தும் விட்டார். அதன் பிறகு 'இ' என்பவர் 'அ'விடம் சென்று 'ஆ' சரக்குக்கான விலையைத் தர தவறினால் எந்த மறு பயனுமின்றி தான் தருவதாக வாக்களித்தார். 'ஆ' விலையை தரத் தவறிவிட்டார். 'இ' என்பவரின் பொறுப்பு நிலையை தீர்மானி.

9. 'A' directs 'B', a solicitor to sell his estate by auction and to employ an auctioneer for the purpose. 'B' names 'C' as an auctioneer to conduct the sale. Discuss the legal position of 'C'.
'ஆ' என்கிற வழக்குரைஞரை 'அ' தன் நிலச்சொத்தை ஏலத்தில் விற்கவும், அதன் பொருட்டு ஏல விற்பனை செய்பவர் ஒருவரை அமர்த்தவும் பணிக்கிறார். 'இ'-ஐ ஏல விற்பனை செய்பவராக 'ஆ' நியமிக்கிறார். 'இ'-ன் சட்ட நிலையை ஆராய்க.

10. Three brothers, 'A' aged 20 years, 'B' aged 19 years and 'C' aged 17 years decide to form a partnership with the provision that 'C' will share the profit only. Can they do so?
20 வயதான 'அ' 19 வயதான 'ஆ' மற்றும் 17 வயதான 'இ' என்ற மூன்று சகோதரர்கள் ஒரு கூட்டாண்மையை அமைப்பதாகவும் 'இ' இலாபத்தில் மட்டும் பங்கு பெறுவார் எனவும் தீர்மானிக்கின்றனர். அவர்கள் அவ்வாறு இயங்க இயலுமா?

———————

TA2B

Register No.

4993–21

(For the candidates admitted from 2017-2018 onwards)

**LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, FEBRUARY 2022.**

(Three-year Regular Course)

First Year – Second Semester

**PROPERTY LAW**

Time : $2\frac{1}{2}$ hours　　　　Maximum : 70 marks

**PART A** — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Examine to what extent the doctrine of part performance has been incorporated in the Transfer of Property Act.
சொத்துரிமை மாற்று சட்டத்தில் பகுதி நிறைவேற்றல் கோட்பாடு எந்த விதத்தில் செயல்படுகிறது என்பதை ஆராய்க.

2. Explain the Doctrine of Election and bring out the differences between English Law and Indian Law.
தேர்ந்துகொளல் கோட்பாட்டினை விளக்கி அது பற்றிய இந்திய சட்டத்திற்கும் இங்கிலாந்து சட்டத்திற்கும் உள்ள வேறுபாட்டினை வெளிக்கொணர்க.

3. 'The doctrine of marshalling is the reverse of contribution' – Explain.
''அடைமானச் சொத்து விகித உரிமைக் கோட்பாடானது விகிதப் பொறுப்புக் கோட்பாட்டிற்கு எதிர்மறையானது'' - விளக்குக.

**PART B** — (2 × 7 = 14 marks)

**Answer TWO of the following in about 300 words each.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. "A person cannot accept a benefit and reject a burden under the same instrument" – Explain.
''ஒரே ஆவணத்தின் கீழ் ஒரு நபர் ஒரு நலனைப் பெறவும் ஒரு சுமையை நிராகரிக்கவும் இயலாது'' - விளக்குக.

5. "The right of redemption is a statutory right which cannot be fettered by a condition which impedes or prevents redemption". Comment.
''அடைமானத்தை மீட்கும் உரிமை ஒரு சட்டப்பூர்வமான உரிமையாகும். அதை மீட்டுக்கொள்வதை தாமதப்படுத்தும் அல்லது தடை செய்யும் எந்தவொரு நிபந்தனையும் அம்மீட்புரிமையைத் தடைசெய்ய முடியாது'' - கருத்துக் கூறுக.

6. What are the requirements of a prescriptive easement? Compare it with customary easement?
நீடானுபோக வசதியுரிமையின் முக்கியக் கூறுகள் யாவை? அதனை வழக்காறு வசதியுரிமையுடன் ஒப்பிடுக.

## PART C — (5 × 4 = 20 marks)

7. **Write short notes on FIVE of the following:**
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக:

(a) Spes successionis
எதிர் நோக்கு இறங்குரிமை

(b) Distinguish lease from licence
குத்தகையை உரிமத்திலிருந்து வேறுபடுத்துக

(c) Vendor's lien
விற்பவருடைய பற்றுரிமை

(d) Charge
பொருட்பிணை பொறுப்பு

(e) Notice to quit
வெளியேறுவதற்கான அறிக்கை

(f) Legal subrogation
சட்ட மாற்றமர் அடைமானம்

(g) Exchange
பரிமாற்றம்

## PART D — (2 × 6 = 12 marks)

**Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' orally grants to 'B' the right to catch and carry away fish from his lake for Rs.2,000/-. Is the grant valid?
'அ' என்பவர் வாய்மொழியாக தன் குளத்திலிருந்து மீன்களை பிடிப்பது மற்றும் எடுத்துச் செல்லும் உரிமைகளை ரூ.2,000/-த்திற்கு 'ஆ'வுக்கு அளிக்கிறார். இந்த அளிப்புச் செல்லுமா?

9. A usufructuary mortgage fixes a term of 5 years for repayment. Can the mortgagor recover the property before the expiry of the term on the ground that the debt has been paid off from the usufruct. Decide.
ஒரு சுவாதீன அடைமானத்தில் பணம் திரும்பச் செலுத்தக் காலக்கெடு 5 ஆண்டுகள் எனத் தீர்மானிக்கப்படுகிறது. அடைமானச் சொத்தில் வரும் வருமானத்திலிருந்து கடனடைந்துவிடின் குறித்த காலக்கெடுவிற்கு முன்னர் அடைமானம் வைத்தார் தனது அடைமானச் சொத்தினை மீட்டுக்கொள்ள முடியுமா? தீர்வு காண்க.

10. 'A' agrees to sell a house to 'B' and puts 'B' in possession. Before the sale deed is executed, A's title is found to be defective. What are B's rights?
'அ' வீட்டை 'ஆ'விற்கு விற்பதாக உடன்பட்டு வீட்டின் உடைமையை 'ஆ'விற்கு அளிக்கிறார். விற்பனை பத்திரம் குறைபாடு உள்ளது என கண்டுபிடிக்கப்பட்டது. 'ஆ'வினுடைய உரிமைகள் என்ன?

———————

TA2D Register No. | | | | | | | | |

**4995–21**

(For the candidates admitted from 2017-2018 onwards)

**LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, FEBRUARY 2022.**

(Three-year Regular Course)

First Year – Second Semester

**FAMILY LAW – II**

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

**PART A** — (2 × 12 = 24 marks)

**Answer TWO of the following in about 500 words each.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. What is Joint Family under Mithakshara law? Explain the rights of a coparcener under Mithakshara law.
   மிதாக்ஷார சட்டத்தின் கீழ் கூட்டுக் குடும்பம் என்றால் என்ன? மிதாக்ஷார சட்டத்தின் கீழ் பங்குரிமையரின் உரிமைகளை விளக்குக.

2. Explain the term 'Hiba' under Muslim Law. Explain the requirements for completion of Hiba.
   முகமதிய சட்டத்தில் ''ஹிபா'' என்ற சொல்லை விவரிக்கவும். ''ஹிபா'' முற்றுப்பெற தேவையானவற்றை விவரிக்க.

3. Discuss the rules of succession applicable to female intestate under Christian law of inheritance.
   கிறித்துவ இறங்குரிமை சட்டத்தின் கீழ் பெண் உயில் எழுதாமல் இறந்தால் பொருந்தக்கூடிய இறங்குரிமை விதிகளை விவாதிக்கவும்.

**PART B** — (2 × 7 = 14 marks)

**Answer TWO of the following in about 300 words each.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the rules of inheritance for Stridhana Property before the passing of the Hindu Succession Act, 1956.
   1956-ஆம் ஆண்டின் இந்து இறங்குரிமை சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பு சீதனச் சொத்து சம்பந்தப்பட்ட இறங்குரிமையின் விதிகளை விளக்குக.

5. Who is executor and administrator? Explain his rights and duties under the Indian Succession Act, 1925.
   நிறைவேற்றாளர் மற்றும் நிர்வகிப்பவர் என்பவர் யார்? 1925-ஆம் ஆண்டின் இந்திய இறங்குரிமை சட்டத்தின் கீழ் அவருடைய உரிமைகள் மற்றும் கடமைகளை விவரி.

6. Mention the sharers and their shares under Hanafi Law.
   ஹனபி சட்டத்தின் கீழ் பங்குதாரர்களையும் அவர்களது பங்குகளையும் குறிப்பிடுக.

**PART C** — (5 × 4 = 20 marks)

7. **Write short notes on FIVE of the following :**
   பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

   (a) Muthawalli.
   முத்தவல்லி.

   (b) Doctrine of Radd under Shia Law.
   ஷிய சட்டத்தின் கீழ் ரத் கோட்பாடு.

(c) Doctrine of cypres
இயன்றளவுக் கோட்பாடு.

(d) Avyavaharika debt.
அவ்யவகாரிகா கடன்.

(e) Pre-emption.
வாங்கும் முன்னுரிமை.

(f) Probate and Letters of Administration.
உயில் மெய்ப்பிதழ் மற்றும் நிர்வாகப் பத்திரம்.

(g) Demonstrative legacy.
சுட்டிக்காட்டும் உயில்வழிக் கொடை.

**PART D** — (2 × 6 = 12 marks)

**Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A Hindu male died leaving his father, mother, a legitimate son, two legitimate daughters and one illegitimate son. Divide his property.
ஒரு ஆண் இந்து தனது தந்தை, தாய், ஒரு முறை மணப் பிறப்பு மகன், இரண்டு முறை மணப் பிறப்பு மகள்கள் மற்றும் ஒரு முறையிலா பிறப்பு மகன் ஆகியோரை விட்டு இறந்து விட்டார். அவரது சொத்தை பிரித்தளிக்க.

9. A Hanafi Muslim dies leaving behind him a son, two daughters, mother and brother. Distribute his estate.
ஒரு ஹனபி முகமதியர் இறக்கும் பொழுது அவரது ஒரு மகன், இரண்டு மகள்கள், தாய் மற்றும் சகோதரனை விட்டு விட்டு இறக்கிறார். அவரது சொத்தினை பங்கிடுக.

10. A Christian died leaving his wife, three sons and three daughters. Divide his property.
ஒரு கிறித்துவர் இறக்கும் பொழுது அவரது மனைவி, மூன்று மகன்கள் மற்றும் மூன்று மகள்களை விட்டு விட்டு இறக்கிறார். அவரது சொத்தினை பிரித்திடுக.